මුදල් අමාත්‍යාංශය
நிதி அமைச்சு
MINISTRY OF FINANCE

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01. ශ්‍රී ලංකාව
செயலகம், கொழும்பு 01. இலங்கை
The Secretariat, Colombo 01. Sri Lanka

කාර්යාලය / அலுவலகம் / Office: (94)-11-2484500, (94)-11-2484600, (94)-11-2484700
ෆැක්ස් / பெக்ஸ் / Fax: (94)-11-2449823
වෙබ් අඩවිය / வெப் சைட் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No.: PFD/PMD/Domestic/Cir.03/2020
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 09 .10.2020

**அரச நிதிச் சுற்றுநிருப இல: 03/2020**

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்,
திணைக்களங்களின் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள்,
உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள்,
அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளின் தலைவர்கள் மற்றும்
அரசுடைமை கம்பனிகளின் தலைவர்கள் அனைவருக்கும்

**உள்நாட்டுக் கைத்தொழில்களுக்கு ஒத்துழைப்பு வழங்கல் தொடர்பான கொள்கை**

பின்வரும் கைத்தொழில்களுக்கான கொள்கையை உருவாக்குவதற்கு "உள்நாட்டு கைத்தொழில்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கான பெறுகை வழிகாட்டுதல்களை திருத்துதல்" என்ற அமைச்சரவை விஞ்ஞாபனத்துக்கு 2020.07.15 ஆந் திகதிய 20/1086/204/108 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டது:

அ. கணனி மென்பொருள் மற்றும் வன்பொருள் தொழிற்றுறை
ஆ. நிர்மானத் தொழிற்றுறை
இ. தளபாடம் மற்றும் தொடர்புடைய தயாரிப்புகள் தொழிற்றுறை

**02. கணனி மென்பொருள் மற்றும் வன்பொருள் தொழிற்றுறை**

2.1 **மென்பொருள் உற்பத்திகள் - மென்பொருள் தயாரிப்புகளைக் கொள்வனவு செய்யும்போது பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும். (தயாரிக்கப்பட்ட, தனிப்பயனாக்கப்பட்ட, பெறுமதி சேர்க்கப்பட்ட அல்லது சேவை என்ற வகையில் மென்பொருள்);**

2.1.1 பிரயோக மென்பொருளை (Application Software) கொள்முதல் செய்வதற்கான விலை மனுக்களைக் கோரும் போது, அதன் மதிப்பிடப்பட்ட செலவு ரூபா 02 மில்லியனுக்கும் குறைவாக இருப்பின், அத்தகைய விலை மனுக்கள் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மை (ICTA) இல் பதிவுசெய்யப்பட்ட

மற்றும் https://startupsl.lk எனும் இணைய தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள தொடக்க நிறுவனங்களிடமிருந்து பிரத்தியேகமாகக் கோரப்படுதல் வேண்டும். இப்பிரிவின் நோக்கத்துக்காக, குறித்த தொடக்க நிறுவனங்களானவை தொடர்புடைய அதிகார சபைகளில் ஆறு மாதங்களுக்கு அதிக மற்றும் ஐந்து வருடங்களுக்கு குறைந்த காலம் பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் https://startupsl.lk எனும் இணைய தளத்தில் பிரசுரிக்கப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.

2.1.2 மென்பொருள் அல்லது தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) தீர்வுகளை (Solutions) கொள்முதல் செய்வதற்கான விலை மனுக்களைக் கோரும்போது மதிப்பீடு ரூபா 02 மில்லியனுக்கும் அதிகமாக இருக்கும் போது, உள்நாட்டு பெரும்பான்மை உரித்தினைக் கொண்ட நிறுவனங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்[1] என்பதுடன் குறைந்தபட்சம் 25 சதவீத உள்ளூர் பெறுமதி சேர் மென்பொருட்களாகவும் இருத்தல் வேண்டும். உள்ளூர் பெறுமதி சேர்வினை உறுதிப்படுத்துவதற்கு, விலை மனுதாரர் நிதி முன்மொழிவுடன் உள்ளூர் பெறுமதி சேர்வு தொடர்பான விரிவான செலவு விபரத்தினைச் சமர்ப்பித்தல் வேண்டும். விலை மனு மதிப்பீடு செய்யப்படும் சந்தர்ப்பத்தில், மனுதாரர்கள் அத்தகைய பெறுமதி சேர்வு மற்றும் வெளிநாட்டு, உள்ளூர் கூறுகளின் செலவு விபரங்களை ஐ.அ.டொ. மற்றும் இலங்கை ரூபாவில் சான்றுப்படுத்தும் அங்கீகரிக்கப்பட்டகணக்காய்வாளரிடமிருந்து சான்றிதழ் ஒன்றினைச் சமர்ப்பித்தல் வேண்டும். பெறுமதி சேர்வானது, முகில் மென் பொருட்களையும் (Cloud Solutions) கீழ்வருவனவற்றின் ஏதெனும் பங்களிப்புகளையும் உள்ளடக்குகிறது;

அ) உள்நாட்டு பொருட்கள்

ஆ) நிபுணத்துவம் (உள்ளூர் பெறுமதி சேர்வு 25 சதவீதத்தில் குறைந்தபட்சம் 10 சதவீத நிபுணத்துவம்)

இ) உள்ளூர் மேல்நிலை ஒத்துழைப்பு /பராமரிப்பு/ முறைமை ஒருங்கிணைப்பு

2.1.3 குறைந்த பட்சம் 25 சதவீத உள்ளூர் பெறுமதி சேர்வு என்ற தேவையை பூர்த்தி செய்யும் மனுதாரருக்கு, மற்றைய மனுதாரர்கள் மேற்கோள் காட்டிய விலைகளிலும் பார்க்க தொழில்நுட்ப மதிப்பீட்டிலல்லாது நிதி மதிப்பீட்டில் மாத்திரம் 30 சதவீத முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

## 2.2. வன்பொருள் தயாரிப்புகள் – வன்பொருள் தயாரிப்புகளை கொள்வனவு செய்யும் போது பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும்;

---

[1] "உள்நாட்டு பெரும்பான்மை உரித்துடைய நிறுவனம், உள்நாட்டு நிறுவனம் அல்லது உள்நாட்டுக் கம்பனி" என்பது இலங்கையினரால் 51 சதவீதத்திற்கும் அதிகமான உரிமையுடன் இலங்கையில் தொடர்புடைய அதிகாரத்துடன் முதலில் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் என்பதுடன், குறித்த வரைவிலக்கணம் இந்த ஆவணம் முழுவதுக்கும் ஏற்புடையதாகும்.

2.2.1 உற்பத்தி அல்லது பொருத்தல் வகைகளின் அடிப்படையில் வன்பொருளில் குறைந்தது 25 சதவீத உள்ளூர் பெறுமதி சேர்வு வழங்கும் உள்நாட்டு நிறுவனங்களுக்கு, பின்வரும் வகைகளில் பெறுமதி சேர்வு அங்கீகரிக்கப்பட்டு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்:

அ) பொருட்கள் - உள்ளூர் பெறுமதி சேர்வு 25 சதவீதத்தில் குறைந்தபட்சம் 5 சதவீத உள்ளூர் பொருட்கள்

ஆ) நிபுணத்துவம் / ஊழியம்

இ) உள்ளூர் மேல்நிலை ஒத்துழைப்பு /பராமரிப்பு மென்பொருள்

2.2.2 உள்ளூர் பெறுமதி சேர்வினை உறுதிப்படுத்துவதற்கு, விலை மனுதாரர் நிதி முன்மொழிவுடன் உள்ளூர் பெறுமதி சேர்வு தொடர்பான விரிவான செலவு விபரத்தினைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் விலை மனு மதிப்பீடு செய்யப்படும் கட்டத்தில், மனுதாரர்கள் அத்தகைய பெறுமதி சேர்வினைச் சான்றுப்படுத்தி அங்கீகரிக்கப்பட்ட கணக்காய்வாளரிடமிருந்து சான்றிதழ் ஒன்றினைச் சமர்ப்பிப்பதலும் வேண்டும். குறைந்த பட்சம் 25 சதவீத உள்ளூர் பெறுமதி சேர்வு என்ற தேவைப்பாட்டினை பூர்த்தி செய்யும் அத்தகைய நிறுவனத்திற்கு தொழில்நுட்ப மதிப்பீட்டிலல்லாது நிதி மதிப்பீட்டில் மாத்திரம் 30 சதவீத முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

**2.3 கலப்புத் தீர்வுகள்** (Composite Solutions) - **(வன்பொருள், மென்பொருள், முறைமை ஒருங்கிணைப்பு மற்றும் / அல்லது பராமரிப்பு)**:

2.3.1 மொத்த தீர்வுக்கான, கலப்பு உள்ளூர் பெறுமதி சேர்வு 25 சதவீதத்திற்கு அதிகமாக இருக்கும் சந்தர்ப்பத்தில் மேற்கூறிய பந்தி 2.1 மற்றும் 2.2 ஆகியவை கலப்புத் தீர்வுகளுக்காகவும் பயன்படுத்தப்படலாம்.

2.3.2 உள்ளூர் பெறுமதி சேர்வினை உறுதிப்படுத்துவதற்கு, விலை மனுதாரர் நிதி முன்மொழிவுடன் உள்ளூர் பெறுமதி சேர்வு தொடர்பான விரிவான செலவு விபரத்தினைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் விலை மனு மதிப்பீடு செய்யப்படும் கட்டத்தில், மனுதாரர்கள் அத்தகைய பெறுமதி சேர்வினைச் சான்றுப்படுத்தி அங்கீகரிக்கப்பட்ட கணக்காய்வாளரிடமிருந்து சான்றிதழ் ஒன்றினைச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

**2.4** மடிக்கணினிகள் மற்றும் டெஸ்க்டாப் தனிநபர் கணினிகளைக் கொள்வனவு செய்வதற்கு விலைமனு கோரும் போது ஐ.சி.டி.ஏ (ICTA) வடிவமைத்த நிலையான தொழில்நுட்ப விவரக் குறிப்புகளைப் (Standard Technical Specification) பயன்படுத்த வேண்டும். அத்தகைய டெஸ்க்டாப்புகள் மற்றும் மடிக்கணினிகளுக்கான விவரக்குறிப்புகளை ஐ.சி.டி.ஏ இணையதளத்தில் காணலாம். அரசாங்க நிறுவனங்கள் பயனர்களின் உகந்த தேவைகளுக்கு ஏற்ப கணினிகளைத் தேர்ந்தெடுக்கலாம். விவரக்குறிப்புகள் ஐ.சி.டி.ஏ இனால் அவ்வப்போது புதுப்பிக்கப்படும்.

2.5 தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறையில் தொழில்நுட்ப விடயங்கள் தொடர்பான ஏதேனும் மாற்றங்கள் மற்றும் மேற்குறித்த நடைமுறைகளில் தெளிவற்ற நிலைமை காணப்படின் உரிய கொள்முதல் நிறுவனங்கள் ஐ.சி.டி.ஏ இன் ஆலோசனையினை பெறுதல் வேண்டும். ஐ.சி.டி.ஏ இன் தீர்மானமே இறுதியானதாகக் கருதப்படுதல் வேண்டும்.

**03. நிர்மானத் தொழிற்றுறை, தளபாடம் மற்றும் தொடர்புடைய தயாரிப்புகள்** – நிர்மான சேவைகள் மற்றும் தளபாட வழங்கலுக்கான விலை மனுக்களை கோரும் போது பின்வரும் நடைமுறைகளை பின்பற்ற வேண்டும்;

**3.1 நிர்மானத் தொழிற்றுறை;**

i. ரூபா 25 மில்லியனுக்கு குறைவான அல்லது சமமான மதிப்பீட்டையுடைய அனைத்து நிர்மான ஒப்பந்தங்கள் தொடர்பிலும் விலைமனுக்கள் நிர்மானக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையால் (Construction Industry Development Authority - CIDA) சி5, சி6, சி7, சி8 மற்றும் சி9 தரப்படுத்தப்பட்ட நிர்மான ஒப்பந்தக் காரர்களிடமிருந்து பிரத்தியேகமாக அழைக்கப்படும்.

ii. ரூபா 25 மில்லியனுக்கு அதிகமான மற்றும் ரூபா 50 மில்லியனுக்கு குறைவான அல்லது சமமான மதிப்பிடப்பட்ட செலவின ஒப்பந்தங்களுக்கான விலைமனுக்கள் கோரப்படும் போது நிர்மானக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை சி5 மற்றும் சி4 தரப்படுத்தலைக் கொண்ட ஒப்பந்தக் காரர்கள் மாத்திரம் விலைமனு கோரலுக்கு அனுமதிக்கப்படுவர்.

iii. அ) ரூபா 50 மில்லியனுக்கு அதிக மற்றும் ரூபா 150 மில்லியனுக்கு குறைவான அல்லது சமமான மதிப்பிடப்பட்ட செலவின ஒப்பந்தங்களுக்கு விலைமனுக்கள் கோரப்படும் போது நிர்மானக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை சி4 மற்றும் சி3 தரப்படுத்தலைக் கொண்ட ஒப்பந்தக் காரர்கள் மாத்திரம் விலைமனு கோரலுக்கு அனுமதிக்கப்படுவர்.

ஆ) நிர்மானக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய மதிப்பிடப்பட்ட ஒப்பந்த வரையறைகளின் அடிப்படையில் ரூபா 150 மில்லியனுக்கு அதிக மற்றும் ரூபா 600 மில்லியன் வரைக்குமான ஒப்பந்தங்களுக்கு நிர்மானக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை சி3 மற்றும் சி2 தரப்படுத்தலைக் கொண்ட உள்நாட்டு கம்பனிகளிலிருந்து (ஆலோசகர்கள் மற்றும் நிர்மான ஒப்பந்தக்காரர்கள்) பிரத்தியேகமாக விலைமனுக்கள் கோரப்படும்.

இ) நிர்மானக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய மதிப்பிடப்பட்ட ஒப்பந்த வரையறைகளின் அடிப்படையில் ரூபா 600 மில்லியனுக்கு அதிக ஒப்பந்தங்களுக்கு நிர்மானக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை சி1 மற்றும் அதற்குமேற்பட்ட தரப்படுத்தலைக் கொண்ட உள்நாட்டு கம்பனிகளிலிருந்து (ஆலோசகர்கள் மற்றும் நிர்மான ஒப்பந்தக்காரர்கள்) பிரத்தியேகமாக விலைமனுக்கள் கோரப்படும்.

iv. இத்தொழில்களில் அரசுடமை தொழில்முயற்சிகளின் (SOE) வகிபாகத்தினைக் கருத்திற்கொண்டு, அவை போட்டி அடிப்படையில் ஒப்பந்தமொன்றுக்கான விலைமனுவினைச் சமர்ப்பிக்கும் போது, அத்தகைய தொழில்முயற்சிகளுக்கு ஏனைய அனைத்து ஒப்பந்தக்காரர்களிலும் பார்க்க 15 சதவீத முன்னுரிமை வழங்கப்படும். இது தொழில்நுட்ப மதிப்பீட்டிலன்றி நிதி மதிப்பீட்டில் மட்டுமே கருத்திற்கொள்ளப்படும்.

v. விலைமனு நம்பத்தகாதது என்பதை உறுதிப்படுத்த, பின்வரும் அளவுகோல்களை பின்பற்ற வேண்டும்;

அ) விலைமனுப் பெறுமதி பொறியிலாளர் மதிப்பீட்டில் 15 சதவீதத்திற்கு குறைவாகவோ அல்லது அதிகமாகவோ இருந்தால் விலைமனு நிராகரிக்கப்பட வேண்டும்.

ஆ) குறித்தவோர் கொள்முதலில் பொறியாளர்களின் மதிப்பீடுகளிலிருந்து கணிசமான செலவு வேறுபாடுகளுடன் பல விலகல்களும் காணப்படும் சந்தர்ப்பத்தில், மேற்கண்ட செயலை மேற்கொள்வதற்கு முன் பொறியாளர்கள் மதிப்பீட்டை மறுபரிசீலனை செய்ய தகுந்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

vi. நிர்மானத் தொழிலில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கும் நோக்கத்திற்காக, நிர்மானக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் பதிவினைக் கொண்ட பிரதான ஒப்பந்தக்காரர் குறைந்தபட்சம் 25 சதவீத வேலைகளை (சிவில், எந்திரவியல், மின்சாரம், குழாய் பொருத்துதல் போன்ற) துணை ஒப்பந்தங்களாக வழங்க இயலும்.

vii. பிரதான ஒப்பந்தக்காரர், தற்காலிக தொகை தவிர்ந்த ஒப்பந்த விலையில், 10 சதவீதத்திற்கு மேல் வெளிநாட்டு ஒப்பந்தக்காரர்களுடன் துணை ஒப்பந்தம் செய்யக்கூடாது.

viii. உள்ளூர் கட்டுமான ஒப்பந்தங்களுக்கு, இணைப்பு 1 இன் படி பண்டங்கள் (Goods) மற்றும் பொருட்கள் (Materials) BOQ இன் கீழ் தேவைப்படும்போது, அத்தகைய பண்டங்கள் மற்றும் பொருட்கள் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட / உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் / பொருட்களிலிருந்து பிரத்தியேகமாக பெறப்பட வேண்டும்.

3.2 தளபாடங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய தயாரிப்புகள், ஒரு வேலை ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக அல்லது ஒரு வேறான பொருள் ஒப்பந்தமாக கொள்முதல் செய்யப்படும் போது, மரத் தளபாடங்கள் மற்றும் மரம் அல்லாத தளபாடங்களுக்கு முறையே குறைந்தபட்சம் 70 சதவீதம் பெறுமதி சேர்வு மற்றும் 50 சதவீதம் பெறுமதி சேர்வு என்ற வகையில், அனைத்து தளபாடங்களும் உள்நாட்டு மூலங்களிலிருந்து பிரத்தியேகமாக பெறப்பட வேண்டும். இறக்குமதி செய்யப்பட்ட மரங்களின் பயன்பாட்டை ஊக்குவிக்கும் பொருட்டு, உள்நாட்டு பெறுமதி சேர்வினைக் கணக்கிடும்போது இறக்குமதி செய்யப்பட்ட மரங்களின் விலை கணக்கில் கொள்ளப்படும்.

04. உள்நாட்டு விருப்பத்தேர்வை வழங்குவது தொடர்பான மேற்கூறிய அளவுகோல்கள் மென்பொருள் மற்றும் வன்பொருள் தொழில், நிர்மானத் தொழில் மற்றும் தளபாடங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய தயாரிப்புத் தொழில்களுக்கு மட்டுமே பொருந்தும் அதே நேரத்தில் பெறுகை வழிகாட்டுதல்கள் - 2006 (பொருட்கள் மற்றும் பணிகள்) பிரிவு 7.9.4, 7.9.5 & 7.9.6 மற்றும் பெறுகை கையேட்டிற்கு மேலதிகமாக (பொருட்கள் மற்றும் பணிகள்) வெளியிடப்பட்ட தொடர்புடைய துணை விதிமுறைகள் என்பன ஏனைய பொருட்கள் சேவைகளின் கொள்முதல் நடவடிக்கைகளுக்கு ஏற்புடையது போல், இவற்றிற்கும் தொடர்ந்து பொருந்தும். மேலும், 2016.03.16 ஆந் திகதிய 04/2016 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கை மற்றும் அதற்கான திருத்தங்களும் தொடர்ந்து ஏற்புடையதாக இருக்கும். இச்சுற்றுநிருபம் தேசிய கொள்வனவு ஆணைக்குழுவின் இணக்கப்பாட்டுடன் வெளியிடப்பட்டுள்ளது.

05. இச்சுற்றுநிருபம் தொடர்பான ஏதேனும் தெளிவுபடுத்தல்களை பின்வருவோரிடம் பெற்றுக்கொள்ள முடியும்;

| சுற்றுநிருப பந்தி | நிறுவனம் | தொலைபேசி | மின்னஞ்சல் |
|---|---|---|---|
| 01-04 | அரச நிதி பணிப்பாளர் நாயகம் | 0112484614 | dgpf@pfd.treasury.gov.lk |
| 02 | கொள்கை வகுப்புத் தலைவர், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மை | 0112369099 | gov-request@icta.lk or gov-procurement@icta.lk |
| 03 | பணிப்பாளர் நாயகம், விலைமனுக்கள் நிர்மானக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை | 0112696017 | info@cida.gov.lk or dirdev@cida.gov.lk |

ஒப்பம்/ எஸ்.ஆர். ஆட்டிகல

திறைசேரியின் செயலாளர்

பிரதிகள்:-

1. சனாதிபதியின் செயலாளர்
2. பிரதம மந்திரியின் செயலாளர்
3. அமைச்சரவையின் செலாளர்
4. கணக்காய்வாளர் நாயகம்

இணைப்பு 01

**<u>உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட / உற்பத்தி செய்யப்பட்ட கட்டிட மூலப் பொருட்களின் பட்டியல்</u>**

1. சீமெந்து (Cement)
2. வலுப்படுத்தப்பட்ட ஸ்டீல் (Reinforcing Steel) மற்றும் ஸ்டீல் வளைவுகளின் குறிப்பிட்ட சில பாகங்கள் (Certain sections of steel angles)
3. செங்கற்கள் (Clay Bricks), சீமெந்துக் கற்கள் (Cement blocks) மற்றும் கொங்கிரீட் பொருட்கள் (Concrete Products)
4. கூரையுடன் தொடர்புடைய பொருட்கள் (Roofing Materials) (களிமண் ஓடுகள் (Clay tiles), சீமெந்து ஓடுகள் (Cement tiles), அஸ்பெஸ்டோஸ் (Asbestos), துத்தநாக மற்றும் அலுமினியக் கலவையிலான கூரைத்தகடுகள் (Zinc Alum), கல்வனைசுப்படுத்தப்பட்ட இரும்புக் கூரைத் தகடுகள் (GI)
5. செரமிக் மற்றும் கிரனைட் பதிப்புக்கள் (Ceramic and granite tiles)
6. அழகு வேலைப்பாடுகள் மற்றும் மரத்திலான தளங்கள் (Parquet & wooden flooring)
7. சமயலறை அலுமாரி (Pantry cupboards) மற்றும் மரத்தளபாடங்கள் (Wooden Furniture)
8. பிவிசி (PVC) மற்றும் யூபிவிசி (UPVC) குழாய்கள், பீலிகள் (Gutters), மழை நீரை கூரையிலிருந்து கீழ் நோக்கி கொண்டுசெல்லும் கீழ்க் குழாய்கள் மற்றும் பொருத்துக்கள் (Downpipes and Fittings)
9. மின் கேபிள்கள் எல்.டி. (Electrical Cables LT)
10. மின்மாற்றிகள் மற்றும் பாகங்கள் (Transformers with Accessories)
11. மின் ஆழிகள் மற்றும் சொக்கட்கள் (Electrical switches & Sockets), மின் விசிறிகள் (Ceiling fans)
12. அலுமினிய வார்ப்புக்கள் (Aluminum extrusions), கதவுகள் மற்றும் ஜன்னல்கள் (Doors & Windows)
13. பக்கவாட்டில் திறக்கும் கதவுகள் (Sliding doors) / ரோலர் ஷட்டர் கதவுகள் (Roller shutter doors) மற்றும் வாயிற் கதவுகள் (Gates)
14. ஒட்டுப்பலகைக் கதவுகள் (Plywood Doors), மரக் கதவுகள் (Wooden Doors), தீயெதிர்ப்புக் கதவுகள் உள்ளடங்கலாக ஃபைபர் கண்ணாடிக் கதவுகள் மற்றும் ஸ்டீல் கதவுகள் (Fiber Glass Doors & Steel Doors including Fire Rated)
15. பித்தளை அயன்மொங்கரி (Brass Ironmongery)
16. வர்ணப் பூச்சுக்கள் (Paints)
17. நீர் விசையியக்கி மற்றும் ஃபுட் வால்வுகள் (Water pumps, foot valves)
18. மின் பனல் பலகை (Electrical panel boards)